# அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் இன்ஸ்ட்யூட் ஆப் இன்ஜினியர்ஸ் (இந்தியா ) IEI AMSEC – ஸ்டூடண்ஸ் சேப்டர் சார்பாக "சுய ஊக்குவிப்பு மற்றும் ஞாபக திறன் வளர்ச்சி" என்ற தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

எருமப்பட்டி அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் 21.04.2015 திங்கட்கிழமையன்று இன்ஸ்ட்யூட் ஆப் இன்ஜினியர்ஸ் (இந்தியா) IEI **AMSEC** – ஸ்டூடண்ஸ் சேப்டர் சார்பாக மாணவர்களின் திறமைகளையும் தன்னம்பிக்கைகளையும் தட்டி எழுப்பும் விதமாக "சுய ஊக்குவிப்பு மற்றும் ஞாபக திறன் வளர்ச்சி" என்ற தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக **இந்திய யோக மற்றும் இயற்கை மருத்துவ நிறுவன இயக்குநர் முனைவர் V.R. அறிவழகன்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினாா. இவ்விழாவை **கல்லூரியின் தாளாளர் திரு. M.மணி** அவர்கள் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். **கல்லூரி முதல்வர் முனைவர் P. பழனிசாமி** அவர்கள் முன்னிலை வகுத்தார். **கல்லூரி துணைமுதல்வர் பேராசிரியர் A.நடராஜன்** அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார். **IEI ஆசிரியர் குழு ஆலோசகர் பேராசிரியர் P.S.செந்தில்குமார்** அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

<u>கல்லூரியின் தாளாளர் திரு M.மணி அவர்கள் பேசியதாவது.</u>

இன்றைய போட்டி நிறைந்த உலகில் நீங்கள் எதிர்கொள்ள வேண்டியவை நிறைய உள்ளது. அதற்கு உங்களுக்கு தன்னம்பிக்கை மிக அவசியம் அதோடு சுய ஊக்குவிப்பும் மிக மிக அவசியம். ஒருவர் எந்த ஒரு செயலிலும் வெற்றி பெறவேண்டுமானால் தளராத முயற்சி கொண்டு முயல வேண்டும், அந்த முயற்சி சற்றும் தளராமல் இருக்க சுய ஊக்குவிப்பு வேண்டும். அத்தகைய சுய ஊக்குவிப்பு உங்களுக்குள் இருக்கும் திறமைகளையும், நேர்மறையான, சிந்தனையையும், மனப்பாங்கையும் பொறுத்து தோன்றும். எத்தனை தடைகள் வந்தாலும் தோல்விகள் சூழ்ந்தாலும் அதை முறியடித்து வெற்றியை எட்ட முடியும். அதே போல் எந்த செயலை, எப்போது, எவ்வாறு சிறப்பாக செய்து முடிக்க வேண்டும், முட்டுக்கட்டைகள் வரும் போது அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கு ஞாபக திறனும் அவசியம் அதற்கு பல்வேறு சுய பயிற்சிகளும் உண்டு.

மேலும், மாணவர்களாகிய உங்களுக்கு சுய ஊக்குவிப்பும் ஞாபக திறனும் மிக மிக அவசியம். உங்கள் திறமைகளானது சமயோஜித புத்தி, நல்ல மனப்பாங்கு, நேர்மறை சிந்தனை மூலம் தான் வெளிக்கொணரமுடியும். அதே சமயம், இன்றைய காலகட்டத்தில் வேலைவாய்ப்பு பெற பல போட்டித்தேர்வுகளையும், போட்டியாளர்களையும் கடந்து தான் ஆக வேண்டும். அதற்கு பாடத்திட்டத்தின் அறிவு மட்டும் போதாது தகவல் தொடர்பு திறன், உடல் மொழி, நேர்மறை அணுகுமுறை என பல உண்டு நம் கல்லூரியில் வேலைவாய்ப்பு துறை மூலம் அதற்கான பயிற்சிகள் திறம்பட வழங்கி கொண்டுள்ளோம். அதுமட்டுமின்றி ஆங்கிலத்தில் புலமை பெறவும் நிறைவான வசதிகள் நிறைந்த ஆய்வகமும் உள்ளது. மேலும் அந்தந்த துறைகள் மூலமும் பல்வேறு பயிற்சி பட்டறைகளையும், கருத்தரங்கங்களையும் நடத்தி வருகிறோம் என்பதும் தாங்கள் நன்றாக அறிந்தது தான்.

மேலும், உங்கள் அறிவுத்திறனை, திறமைகளை பல்வேறு கோணங்களில் மெருகேற்றிகொள்ள ஆய்வகங்களும் ஏராளமான புத்தகங்களை உள்ளடக்கிய மாபெரும் நூலகமும் உள்ளது. திறமையான பொறியாளர்களாகவும் போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ளவும் சுய ஊக்குவிப்பு பெறவும் நீங்கள் அன்றாடம் நூலகம் செல்ல வேண்டும் நிச்சயம் அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாகும் என உறையாற்றினார்

மேலும் அவர் பேசும் போது,

முதலாளிக்கும், பணியாளனக்கும் நடந்த தொலைபேசி உரையாடலையும் அதன் மூலம் அந்த பணியாளன் எவ்வாறு சுய ஊக்குவிப்பு அடைந்தான் என்ற குட்டிக்கதையை மிக சுவரஸ்யமாகவும் மாணவர்களுக்கு உற்சாகவும் ஊக்கமளிக்கும் விதமாகவும் கூறினார்.

<u>**சிறப்பு விருந்தினர் முனைவர் V.R. அறிவழகன பேசியதாவது**</u>

மாணவர்களின் திறமைகளையும் அறிவுத்திறனையும் வெளிக்கொணரும் விதமாக நடத்தபடும் இந்த நிகழ்ச்சி மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. இன்றைய தலைப்பான சுயஊக்குவிப்பு மற்றும் ஞாபக திறன் வளர்ச்சி இன்றைய சூழலுக்கு இன்றியமையாததாகும். மனிதர்கள் பல காரணங்களில் மனஅழுத்தம் அடைகிறார்கள் அந்த மன அழுத்தம் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தின் மூலம் மாற்றமுடியும். யோகாவானது மனதிற்கும் உடலுக்கும் மன வலிமையை தருகிறது. அதே போன்றும் இயற்கை மருத்துவத்தை பொருத்த மட்டும் மருந்தே உணவு! உணவே மருந்து! என்றும் அடிப்படையில் இருந்தால் நலம் பெறும்

மாணவர்களாகிய நீங்கள் யோகா பயிற்சியையும், இயற்கை மருத்துவத்தையும் கடைபிடிக்க வேண்டும் உங்களுக்கு சுய ஊக்குவிப்பும் ஞாபகதிறன் வளர்ச்சியும் ஏற்படும் போதும் எந்த தேர்விலும் வெற்றிபெற இயலும்.

யோகவை பொறுத்த மட்டும் பல்வேறு பயிற்சிகள் உண்டு தூக்கம், மன நிம்மதி கவனம், சுறுசுறுப்பு, சக்தி, திறன், நினைவாற்றல், பயம், புத்தூணர்வு, கோபம் பிடிவாதம், வெட்கம், நினைவாற்றல் என அணைத்தும் யோகா பயிற்சிகள் மூலம் கட்டுப்படுத்தலாம். அதே போன்ற இயற்கை மருத்துவமும் இதை சார்ந்து தான் உள்ளது. பல்வேறு மூலிகைகள் நம் உடலுக்கும், மனதிற்கும் தெம்பு அளிக்கிறது இக்கல்லூாயில் பல்வேறு பயிற்சி பட்டறைகளும், மாணவர்களுக்கு பொது நலத்தை தூண்டும் வகையில் பல்வேறு அமைப்புகளும் சிறப்பாக செயல்படுவதை பார்த்து மிக பொருமையாகவும் உள்ளது. இந்த வாய்ப்புகளை நீங்கள் நிச்சயம் பயன்படுத்தி கொள்ள வேண்டும் அப்போது தான் வாழ்வில் வளம் பெற முடியும் என்று உறையாற்றினார்.

விழாவில் இறுதியாக எலக்ட்ரிக்கல் அண்ட் கம்யூணிகேசன் என்ஜினியரிங் துறை முதலாமாண்டு மாணவி செல்வி A.சௌமியா அவர்கள் நன்றியுரை கூறினார்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை விழாவின் ஆசிரியர் குழு ஆலோசகர் உதவி பேராசிரியர் திரு. G. மணிகண்டன் அவர்களும் மற்றும் குழு மாணவர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

ூ